விரைவு நீதிமன்றம் (ந.வ), உத்தமபாளையம்

முன்னிலை: திரு.S.அமலநாத கமலக்கண்ணன், B.A.,B.L.,Hon's.,
நீதித்துறை நடுவர், விரைவு நீதிமன்றம்,
உத்தமபாளையம்.

2026–ஆம் ஆண்டு ஜீன் திங்கள் 25–ஆம் நாள் வியாழக்கிழமை

சுருக்குமுறை ஆவண வழக்கு எண். 339/2025

CNR.No.TNTH080008202025

புகார்தாரர்	திரு.சூரியமூர்த்தி (வயது 33/2026), த/பெ.சேகர், எண்.61/3, வடக்கு ரைஸ்மில் தெரு, கோகிலாபுரம், உத்தமபாளையம் தாலுகா, தேனி மாவட்டம்.
எதிரி	திரு.மாரிராஜா (வயது 30/2026), த/பெ.சிவராமகிருஷ்ணன், மன்னார் செட்டியார் வளாகம் எதிர்சந்து, ஞானம்மன் கோவில் ஆர்ச் அருகில், உத்தமபாளையம், உத்தமபாளையம் தாலுகா, தேனி மாவட்டம்.
குற்றம் முறையிட்டது	மாற்று முறை ஆவணச் சட்டம் பிரிவுகள் 138, 142–ன் கீழ்
காசோலை எண். (981013)	27.06.2025
காசோலை தொகை	Rs.6,00,000/–
வசூலுக்கு தாக்கல் செய்த நாள்கள்	30.06.2025, 30.07.2025, 01.09.2025
காசோலை திரும்பிய நாள்கள்	01.07.2025, 31.07.2025, 02.09.2025
காசோலை திரும்பிய காரணம்	Funds Insufficient
அறிவிப்பு அனுப்பிய நாள்	06.09.2025
அறிவிப்பு பெறப்பட்ட நாள்	07.09.2025
வழக்கு தாக்கல் நாள்	17.10.2025
தீர்ப்பு நாள்	25.06.2026
புகார்தாரர் தரப்பு வழக்கறிஞர்	திரு.S.ஜெயராம்

AMALANATHA KAMALAKANNAN S
Digitally signed by AMALANATHA KAMALAKANNAN S
Date: 2026.06.25 18:39:43 +0530

எதிரி தரப்பு வழக்கறிஞர்	திரு.K.அஜ்மல்கான்
தீர்வு	**எதிரி மாற்றுமுறை ஆவணச்சட்டம் பிரிவு 138–ன் கீழ் குற்றவாளி என முடிவு செய்து B.N.S.S பிரிவு 278(2)–ன் கீழ் தீர்ப்பளிக்கப்படுகிறது.**

இருதரப்பு வாதம் கேட்கப்பட்டும், வழக்கு ஆவணங்கள் பரிசீலனை செய்யப்பட்டும் இன்று இந்நீதிமன்றம் வழங்கிடும்,

<u>தீர்ப்புரை</u>

1. <u>புகார்தாரர் வழக்கு சுருக்கம்:</u>

1.1. புகார்தாரரும், எதிரியும் குடும்ப நண்பர்கள் ஆவார்கள். புகார்தாரருக்கும், எதிரிக்கும் ஏற்கனவே நல்லமுறையில் வரவுசெலவு இருந்து வந்துள்ளது. அதன் அடிப்படையில் எதிரி தனது அவசர நிமித்தம், குடும்ப செலவிற்காக வேண்டி புகார்தாரரிடம் பணம் கேட்டுள்ளார். புகார்தாரர் கடந்த 25.04.2025ம் தேதியன்று தனது வீட்டில் வைத்து ரூ.6,00,000/–ஐ எதிரிக்கு ரொக்கமாக கொடுத்துள்ளார். அதற்கு ஆதரவாக 27.06.2025 நாளிட்ட 981013 என்ற எண் கொண்ட ஸ்டேட் பாங்க் ஆப் இந்தியா வங்கி, உத்தமபாளையம் கிளைக்குரிய ரூ.6,00,000/–த்திற்கான காசோலையை கொடுத்துள்ளார். அந்த காசோலையை பணமாக்கும் பொருட்டு புகார்தாரர் தான் கணக்கு வைத்துள்ள சிட்டி யூனியன் வங்கி, உத்தமபாளையம் கிளையில் 30.06.2025ம் தேதியன்று வசூலுக்கு தாக்கல் செய்துள்ளார். மேற்படி காசோலையானது "Funds Insufficient" என்ற காரணத்தினால் மதிப்பு மறுக்கப்பட்டு 01.07.2025 அன்று திரும்பியது. எதிரி கேட்டுக்கொண்டதற்கிணங்க மேற்படி காசோலையை 30.07.2025ம் தேதியன்று வசூலுக்கு தாக்கல் செய்துள்ளார். மேற்படி காசோலையானது "Funds Insufficient" என்ற காரணத்தினால் மதிப்பு மறுக்கப்பட்டு 31.07.2025 அன்று திரும்பியது.

AMALANATHA KAMALAKANNAN S
Digitally signed by AMALANATHA KAMALAKANNAN S
Date: 2026.06.25 18:39:50 +0530

மீண்டும் எதிரி கேட்டுக்கொண்டதற்கிணங்க மேற்படி காசோலையை 01.09.2025ம் தேதியன்று வசூலுக்கு தாக்கல் செய்துள்ளார். மேற்படி காசோலையானது "Funds Insufficient" என்ற காரணத்தினால் மதிப்பு மறுக்கப்பட்டு 01.09.2025 அன்று திரும்பியது.

1.2. காசோலை தொகையை கேட்டு எதிரிக்கு 06.09.2025 நாளிட்டு அனுப்பிய சட்ட அறிவிப்பை 07.09.2025ம் தேதி எதிரி பெற்று கொண்டு, 09.09.2025ம் தேதி பதில் அறிவிப்பு அனுப்பி, பணம் செலுத்தாமல் இருந்துள்ளார். புகார்தாரர் அனுப்பிய வழக்கறிஞர் அறிவிப்பு தேதியில் மாத விபரம் 06.09.2025 என்பதற்கு பதிலாக 06.05.2025 என்று தவறாக டைப் செய்யப்பட்டு இருந்ததால் அதை சரிசெய்து ரீஜாயிண்டர் நோட்டீஸ் கடந்த 24.09.2025ம் தேதி எதிரிக்கும், அவரது வழக்கறிஞருக்கும் அனுப்பப்பட்டது. மேலும் எதிரி காசோலையின் தொகையை செலுத்தாமல் புகார்தாரரை மோசடி செய்து ஏமாற்றும் நோக்கத்துடன் செயல்பட்டதால் எதிரி மாற்றுமுறை ஆவணச்சட்டம் பிரிவுகள் 138 மற்றும் 142ன் கீழ் குற்றம் இழைத்துள்ளார் என்பதால் எதிரியை தண்டிக்க வேண்டி இவ்வழக்கினை தாக்கல் செய்துள்ளார்.

2. புகார்தாரர் தாக்கல் செய்துள்ள பிரமாண வாக்குமூலம், புகார்மனு ஆவணங்களை பரிசீலனை செய்து பார்த்ததில் எதிரிக்கு எதிராக வழக்கு விசாரணைக்கு உத்தரவிட முதல் தோற்ற ஆதாரம் இருந்ததால் எதிரிக்கு பிரிவு 227 B.N.S.S–ன் கீழ் அழைப்பாணையுடன் இணைத்து புகார் நகல் அனுப்பப்பட்டது.

3. எதிரி அழைப்பாணையையும், புகார் நகலையும் பெற்றுக்கொண்டு நீதிமன்றத்தில் ஆஜரானதும் எதிரியிடம் B.N.S.S பிரிவு 274–ன் படி குற்றத்தின் சாரம்சம் குறித்து கேள்வி கேட்கப்பட்டது பொய்வழக்கு என்றும், எதிரி குற்றத்தை மறுத்து விசாரணை செய்ய வேண்டும் என்று கூறியுள்ளார்.

AMALANATHA KAMALAKANNAN S

Digitally signed by AMALANATHA KAMALAKANNAN S
Date: 2026.06.25 18:39:58 +0530

4. <u>புகார்தாரர் தரப்பு சாட்சியங்கள் மற்றும் சான்றாவணங்கள்:</u>

புகார்தாரர் திரு.சூர்யமூர்த்தி தனது புகாரில் கூறியுள்ள சங்கதிகளை நிரூபண வாக்குமூலமாக தாக்கல் செய்து அது ம.சா.1 முதல் விசாரணை சாட்சியமாக பதிவு செய்யப்பட்டுள்ளது. எதிரி கொடுத்த 27.06.2025–ம் தேதியிட்ட 981013 என்ற எண் கொண்ட ஸ்டேட் பேங்க் ஆப் இந்தியா வங்கி, உத்தமபாளையம் கிளைக்குரிய ரூ.6,00,000/–க்கான அசல் காசோலை ம.சா.ஆ.1 என்றும், மேற்படி காசோலை "Funds Insufficient" என்ற காரணத்தினால் மதிப்பு மறுக்கப்பட்டு 01.07.2025 ம் தேதியன்று திரும்பியதற்கான வங்கி குறிப்புரை அசல் ம.சா.ஆ.2 என்றும், மேற்படி காசோலை "Funds Insufficient" என்ற காரணத்தினால் மதிப்பு மறுக்கப்பட்டு 31.07.2025 ம் தேதியன்று திரும்பியதற்கான வங்கி குறிப்புரை அசல் ம.சா.ஆ.3 என்றும், மேற்படி காசோலை "Funds Insufficient" என்ற காரணத்தினால் மதிப்பு மறுக்கப்பட்டு 02.09.2025 ம் தேதியன்று திரும்பியதற்கான வங்கி குறிப்புரை அசல் ம.சா.ஆ.4 என்றும், மேற்படி காசோலைக்குரிய தொகையை கேட்டு எதிரிக்கு அனுப்பிய 06.09.2025 நாளிட்ட சட்ட அறிவிப்பு அலுவலக நகல் மற்றும் அஞ்சலக இரசீது ம.சா.ஆ.5 என்றும், 09.09.2025 ம் தேதியிட்டு எதிரி அனுப்பிய பதில் அறிவிப்பு அசல் ம.சா.ஆ.6 என்றும், புகார்தாரர் எதிரிக்கும், எதிரியின் வழக்கறிஞருக்கும் அனுப்பிய ரீஜாயிண்டர் அறிவிப்பு அஞ்சலக ரசீதுடன் கூடிய நகல் ம.சா.ஆ.7 என்று மேற்படி ஆவணங்களை முக்கிய சான்றாவணங்களாக ம.சா.1 குறியீடு செய்துள்ளார்.

5. <u>பிரிவு 351(1)(b) வினா மற்றும் பதில்:</u>

புகார்தாரர் தரப்பில் விசாரிக்க கூடுதல் சாட்சியம் இல்லை என மேற்குறிப்பு செய்ததால் புகார்தாரர் தரப்பு சாட்சியத்தில் எதிரிக்கு பாதகமாக உள்ள அம்சங்களை தொகுத்து BNSS பிரிவு 351(1)(ஆ)–ன் கீழ் வினவிய போது புகார்தாரர் தரப்பு சாட்சியத்தை பொய் சாட்சியம் என்றும், ம.சா.ஆ.1.ஆன

AMALANATHA KAMALAKANNAN S
Digitally signed by AMALANATHA KAMALAKANNAN S
Date: 2026.06.25 18:40:08 +0530

காசோலை தன்னுடையதுதான் என்றும், அதிலுள்ள கையொப்பம் தன்னுடையது இல்லை என்றும், தனது தரப்பில் விசாரிக்க சாட்சி உள்ளது என்றும் கூறினார்.

6. <u>எதிரி தரப்பு சாட்சியங்கள் மற்றும் சான்றாவணங்கள்:</u>

6.1. எ.சா.1 மாரிராஜா தனது சாட்சியத்தில், கடந்த 24.07.2025 ல் எனது வீட்டை காலி செய்தபோது பொருட்களை வேறு வீட்டிற்கு மாற்றும்போது எனது காசோலை தொலைந்துவிட்டது. உத்தமபாளையம் காவல் நிலையத்தில் இது சம்மந்தமாக அதே தேதியன்று இணையதளத்தின் மூலம் புகார் கொடுத்தேன். புகார்தாரர் அனுப்பிய அறிவிப்பிற்கு நான் பதில் அறிவிப்பு அனுப்பியுள்ளேன். எனது காசோலையை யாரிடமும் கொடுக்கவில்லை. எதிரி இணையதளத்தில் கொடுத்த புகார் எ.சா.ஆ.1 மற்றும் எதிரி இணையதளத்தில் புகார் கொடுத்ததற்கான இரசீது எ.சா.ஆ.2 என்று தாக்கல் செய்துள்ளார்.

7. <u>புகார்தாரர் தரப்பு வாதம்:</u>

புகார்தாரர் தரப்பில் கற்றறிந்த வழக்கறிஞர் தனது வாதத்தில், புகார்தாரர் அவரது சாட்சியத்தின் மூலமும், ம.சா.ஆ.1 முதல் ம.சா.ஆ.7 வரையிலான ஆவணங்கள் மூலமும், எதிரி மீதான குற்றச்சாட்டு நிரூபிக்கப்பட்டுள்ளது என வாதம் முன்வைத்துள்ளார். ம.சா.ஆ.1 ஆன காசோலையும், அதிலுள்ள கையொப்பமும் தன்னுடையதுதான் என்று எதிரி ஒப்புக்கொண்டுள்ளதால், மாற்றுமுறை ஆவணச் சட்டத்தின் அனுமானங்கள் புகார்தாருக்கு ஆதரவாக உள்ளது. எதிரி பொய்யான காரணங்களை கூறி பதில் அறிவிப்பு அனுப்பியுள்ளார். புகார்தாரருக்கு ஆதரவாக இருக்கும் அனுமானங்கள் எதிரி தரப்பில் மறுக்கப்படவில்லை என்றும், எனவே எதிரி மீதான குற்றச்சாட்டு நிரூபிக்கப்பட்டுள்ளது என்ற வாதத்தினை முன்வைத்தார்.

8. <u>எதிரி தரப்பு வாதம்:</u>

போதிய வாய்ப்பளித்தும் எதிரி தரப்பில் எவ்வித வாதமும் முன்வைக்கப்படவில்லை.

AMALANATHA KAMALAKANNAN S
Digitally signed by AMALANATHA KAMALAKANNAN S
Date: 2026.06.25 18:40:16 +0530

9. சான்றாவணங்கள் மற்றும் இதர வழக்கு ஆவணங்கள் கவனமாக பரிசீலிக்கப்பட்டு கருத்தில் எடுத்து கொள்ளப்பட்டது.

10. <u>இவ்வழக்கில் எதிரி மீது சுமத்தப்பட்டுள்ள குற்றமான மாற்றுமுறை ஆவண சட்ட பிரிவு 138-ன் படி சந்தேகத்திற்கு இடமின்றி நிரூபிக்கப்பட்டுள்ளதா ? என்பது தீர்விற்குரிய பிரச்சனையாகும்.</u>

10.1. எதிரி மீதான குற்றத்தை நிரூபிக்க பிரிவு 138 மாற்றுமுறை ஆவணச் சட்டத்தின் உட்கூறுகள் நிரூபிக்கப்பட்டிருக்க வேண்டும்.

- ➢ முதலில் எதிரி, புகார்தாரருக்கு 27.06.2025-ம் தேதியிட்டு ரூ.6,00,000/-க்கு கொடுத்த ஸ்டேட் பாங்க் ஆப் இந்தியா வங்கி, உத்தமபாளையம் கிளைக்குரிய ம.சா.ஆ.1 காசோலையானது உரிய காலத்திற்குள் வங்கியில் வசூலுக்கு தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

- ➢ மேற்படி காசோலையானது கடந்த 01.09.2025ம் தேதியன்று Funds Insuffcient என்ற காரணத்தினால் மதிப்பு மறுக்கப்பட்டு சிட்டி யூனியன் வங்கி, உத்தமபாளையம் கிளையிலிருந்து திருப்பப்பட்டது என்பது ம.சா.ஆ.2 ஆவணத்தின் மூலம் நிரூபிக்கப்பட்டுள்ளது.

- ➢ காசோலை திரும்பியது குறித்து 06.09.2025-ம் தேதியன்று புகார்தாரர் அவரது வழக்கறிஞர் மூலம் உரிய காலத்திற்குள் எதிரிக்கு வழக்கறிஞர் அறிவிப்பு அனுப்பியுள்ளது ம.சா.ஆ.5 ஆவணத்தின் மூலம் நிரூபிக்கப்பட்டுள்ளது.

- ➢ மேற்படி அறிவிப்பிற்கு 09.09.2025 நாளிட்டு எதிரி அனுப்பிய பதில் அறிவிப்பு அசல் ம.சா.ஆ.6 ஆவணத்தின் மூலம் நிரூபிக்கப்பட்டுள்ளது.

அதன்பின்னர் எதிரி 15 நாட்களுக்குள் பணம் செலுத்தாமல் இருந்ததால் உரிய காலத்திற்குள் புகார்தாரர் இவ்வழக்கினை தாக்கல் செய்துள்ளார்.

AMALANATHA KAMALAKANNAN S
Digitally signed by AMALANATHA KAMALAKANNAN S
Date: 2026.06.25 18:40:23 +0530

10.2. தற்போது தாவா காசோலையானது எதிரியின் காசோலைதானா? என்றும், எதிரி தன்னுடைய சட்டப்படியான கடனை தீர்க்க தான் புகார்தாரருக்கு தாவா காசோலையை கொடுத்தாரா? என்பதை பரிசீலனை செய்கையில், தாவா காசோலையானது எதிரியின் காசோலைதான் என்றும், அதிலுள்ள கையொப்பம் தன்னுடையதுதான் என்று அவர் ஒப்புக்கொண்டுள்ளார். எனவே மாற்றுமுறை ஆவணச் சட்டப்பிரிவு 118 (a)-ன்படி வழக்கு காசோலை மறுபயனுக்காகத்தான் கொடுக்கப்பட்டுள்ளது என்று புகார்தாரருக்கு ஆதரவாக அனுமானம் நிலவுகிறது. மேலும், K.Bhaskaran Vs. Sankaran Vaidhyan Balan (1999 (4) RCR (Criminal) 309) என்ற மாண்புமிகு உச்சநீதிமன்ற தீர்ப்பின்படி, எதிரி காசோலையில் உள்ள கையொப்பத்தை மறுக்கப்படவில்லை என்பதால் மாற்றுமுறை ஆவண சட்ட பிரிவு 139-ன் படி காசோலையானது சட்டப்படியான கடனை தீர்ப்பதற்காக கொடுக்கப்பட்டதுதான் என்று புகார்தாரருக்கு ஆதரவாக அனுமானம் நிலவுகிறது.

10.3. மேற்கண்ட அனுமானங்கள் புகார்தாரருக்கு ஆதரவாக இருக்கும் பட்சத்தில் எதிரி தரப்பில் மறுக்ககூடிய அனுமானங்கள் ஆகும். Basalingappa Vs mudibasappa என்ற மாண்புமிகு உயர்நீதிமன்ற தீர்ப்பின்படி எதிரி தனது தரப்பு சாட்சியங்களை முன் நிறுத்துவதன் மூலமாகவோ அல்லது புகார்தாரர் சாட்சிகளின் சாட்சியங்களிலிருந்தோ Pre-Ponderance of probability என்ற அடிப்படையில் தனது தரப்பிற்கு ஆதரவாக எதிர்வாதத்திற்குரிய சந்தேகத்தை ஏற்படுத்துவதன் மூலம் மறுக்கலாம்.

10.4. மேற்படி அனுமானங்கள் புகார்தாரருக்கு ஆதரவாக இருக்கும் நிலையில், எதிரி தரப்பில் இருந்து மறுக்கப்படும் சங்கதிகள் யாதெனில்,

"எதிரி புகார்தாரரிடம் ரூ.6,00,000/- கைமாற்றுக்கடன் வாங்கவில்லை என்றும், 2025ம் வருடம் வீடு காலி செய்தபோது தொலைந்துபோன தாவா காசோலையை வைத்து புகார்தாரர் பொய் வழக்கு தாக்கல் செய்துள்ளார்" என்று புகார்தாரரின் வழக்கினை மறுக்கப்பட்டுள்ளது.

AMALANATHA KAMALAKANNAN S

Digitally signed by AMALANATHA KAMALAKANNAN S
Date: 2026.06.25 18:40:31 +0530

10.5. புகார்தாரர் அவரது நிரூபண சாட்சியத்தில், புகார்தாரருக்கும், எதிரிக்கும் இருந்து வந்த பழக்கவழக்கத்தின் அடிப்படையில் எதிரி தனது அவசர நிமித்தம், குடும்ப செலவிற்காக கைமாற்றுக்கடன் பெற்றதாக கூறியுள்ளார். மேற்படி கடன் தொகைக்கு ஆதரவாக எதிரி தாவா காசோலையை கொடுத்தார். அதனை வங்கியில் வசூலுக்கு தாக்கல் செய்தபோது பணம் வசூலாகாமல் Funds Insufficient என காரணம் குறிப்பிட்டு காசோலையானது திருப்பப்பட்டது.

10.6. புகார்தாரரின் வழக்கை நிரூபிக்கும் வகையில், ம.சா.ஆ.1 ஆன எதிரியின் தாவா காசோலையை புகார்தாரர் தாக்கல் செய்துள்ளார். தாவா காசோலை வங்கியிலிருந்து மறுக்கப்பட்ட பின்னர் புகார்தாரர் எதிரிக்கு அனுப்பிய வழக்கறிஞர் அறிவிப்பு அனுப்பியுள்ளார். அதனை எதிரி பெற்று கொண்டு அவரது தரப்பை முன்னிலைப்படுத்தி பதில் அறிவிப்பு அனுப்பியுள்ளார்.

10.7. மேற்படி பதில் அறிவிப்பில், 24.07.2025 ம் தேதியன்று எதிரி வீடு மாறும்போது அவரது காசோலை புத்தகம் தொலைந்துவிட்டது என்றும், அது சம்மந்தமாக 04.08.2025 ம் தேதியன்று உத்தமபாளையம் காவல்நிலையத்தில் எதிரி புகார் கொடுத்துள்ளார் என்றும், புகார்தாரரை எதிரிக்கு யார் என்றே தெரியாது என்றும், புகார்தாரரிடம் எந்த பணமும் வாங்கவில்லை, காசோலை கொடுக்கவில்லை என குறிப்பிட்டுள்ளது.

10.8. எதிரி தானாக முன்வந்து தன்னை எ.சா.1 ஆக விசாரணை செய்துள்ளார். எதிரி அவரது பதில் அறிவிப்பில் குறிப்பிட்டுள்ள விபரங்களை ஒத்திசைத்தே சாட்சியம் அளித்துள்ளார். மேலும் காசோலை புத்தகம் காணாமல் போனது சம்மந்தமாக உத்தமபாளையம், காவல்நிலையத்தில் எதிரி கொடுத்த புகார் மனு மற்றும் இணையதள இரசீதை எ.சா.ஆ.1 மற்றும் எ.சா.ஆ.2 ஆக குறியீடு செய்துள்ளார்.

10.9. தாவா காசோலை சம்மந்தமாக காவல்நிலையத்தில் எதிரி புகார் கொடுத்துள்ளார் என்பது அவரது சாட்சியம் மற்றும் சான்றாவணங்கள் மூலம் தெரியவருகிறது. இருப்பினும் புகார்தாரரை தனக்கு தெரியாது என்றும்,

AMALANATHA KAMALAKANNAN S

Digitally signed by AMALANATHA KAMALAKANNAN S
Date: 2026.06.25 18:40:37 +0530

புகார்தாரரிடம் தனக்கு வரவு செலவு இல்லை என்ற எதிர் வாதத்தை எதிரி அவரது பதில் அறிவிப்பிலும், புகார்தாரரின் குறுக்கு விசாரணை செய்கையிலும் எடுத்துள்ளார். ஆனால் எதிரியை புகார்தாரர் தரப்பில் குறுக்கு விசாரணை செய்தபோது, **" 22.10.2024ம் தேதியன்று G-Pay மூலம் நான் புகார்தாரருக்கு ரூ.20000/- அனுப்பியுள்ளேன் என்றால் சரிதான் என்றும், 27.07.2024ல் ரூ.1300/-மும், 05.08.2024ல் ரூ.2000/-மும், 14.02.2025ல் ரூ.10000/-மும், 19.02.2025ல் ரூ.10000/-த்தை புகார்தாரரின் கணக்கிற்கு நான் அனுப்பியுள்ளேன் என்றால் சரிதான்"** என்று சாட்சியம் அளித்துள்ளார்.

10.10. மேற்படி எதிரியின் சாட்சியத்திலிருந்து அவருக்கும், புகார்தாரருக்கும் இடையே பணப்பரிமாற்றம் இருந்துள்ளது என்பது தெரியவருகிறது. மேற்படி தொகைகளை எதிரி எதற்காக புகார்தாரருக்கு செலுத்தினார் என்பதை நிரூபிக்கும் வகையில் எவ்வித ஆவணங்களும் எதிரி தரப்பில் தாக்கல் செய்யவில்லை. பொதுவாக யார் என்று தெரியாத ஒரு நபருக்கு மற்றொரு நபர் பணம் செலுத்தமாட்டார்கள். இந்நிலையில், புகார்தார் எதிரிக்கு தெரிந்த நபர் என்பதால்தான் புகார்தாரருக்கு எதிரி பணம் செலுத்தியுள்ளார் என்பது தெரியவருகிறது. இரு தரப்பினருக்கும் இடையே பணப்பரிமாற்றங்கள் இருந்துள்ளது என்பது புலப்படுகிற நிலையில், புகார்தாரரை தனக்கு தெரியாது என்றும், அவருடன் வரவு செலவு இல்லை என்று எதிரி பொய்யான எதிர்வாதம் செய்துள்ளார் என்பது கண்டறியப்படுகிறது.

10.11. மேலும் எதிரியின் காசோலை புத்தகம் காணாமல் போயிருந்தாக கூறினாலும், காசோலை புத்தகம் சார்ந்து வங்கியில் Stop payment செய்வதற்கு எதிரி தரப்பில் எவ்வித முயற்சிகளும் எடுக்கவில்லை. மேற்கண்ட நடவடிக்கைகளை எதிரி எதற்காக எடுக்கவில்லை என்பதை குறித்து அவரது தரப்பில் எவ்வித விளக்கமும் அளிக்கவில்லை.

10.12. மேலும் எதிரியிடம் வழக்கு சம்மந்தமாக பிரிவு 351(1)(b)BNSS ன் கீழ் கேள்விகள் கேட்டபோது காசோலையில் உள்ள கையொப்பம் தன்னுடையது

AMALANATHA KAMALAKANNAN S
Digitally signed by AMALANATHA KAMALAKANNAN S
Date: 2026.06.25 18:40:44 +0530

இல்லை என மறுத்துள்ளார். ஆனால் எதிரியை புகார்தாரர் தரப்பில் குறுக்கு விசாரணை செய்கையில், **"காசோலையில் உள்ள கையொப்பம் என்னுடையது என்றால் சரிதான்"** என ஒப்புக்கொண்டுள்ளார். ஆகையால் எதிரியிடம் இந்நீதிமன்றம் கேட்கப்பட்ட கேள்விக்கு அளித்த பதிலுடன் முரண்பட்டு எதிரி சாட்சியம் அளித்துள்ளது கண்டறியப்படுகிறது. எதிரி முன்னுக்குபின் முரணாக சாட்சியம் அளித்துள்ளதால் அவர் மீது சந்தேகம் எழுகிறது.

10.13. மேலும் எதிரி தரப்பினை நிரூபிக்கும் வகையில், அவரது குடும்பத்தினர் அல்லது வேறு நபர்களை சாட்சியங்களாக விசாரிக்க எவ்வித முயற்சிகளும் எடுக்கவில்லை. மேலும் எதிரியின் காசோலை புத்தகம் தொலைந்துவிட்டது என்று எதிரி காவல் நிலையத்தில் புகார் கொடுத்திருந்தாலும், காசோலையை வங்கியில் வசூலுக்கு தாக்கல் செய்து புகார்தாரர் வழக்கறிஞர் அறிவிப்பு அனுப்பிய பின்னர் காவல் நிலையத்தில் புகார்தாரர் மீது சட்டரீதியான நடவடிக்கை எடுத்திருக்க வேண்டும். ஆனால் அவ்வாறு எவ்வித நடவடிக்கையும் எதிரி எடுக்கவில்லை. இவ்வழக்கில் எதிரியின் எதிர்வாதத்தில் சந்தேகம் எழுந்துள்ள நிலையில், எதிரியின் காசோலை புத்தகம் தொலைந்துவிட்டது என்று காவல் நிலையத்தில் எதிரி புகார் கொடுத்த காரணத்தினால் மட்டுமே புகார்தாரரின் மீது சந்தேகம் எழவில்லை என்று முடிவு செய்கிறது.

10.14. மேலும் 25.04.2025 ம் தேதியன்று எதிரி புகார்தாரரின் வீட்டிற்கு சென்று பணம் பெற்றதாக புகார்மனுவில் குறிப்பிட்டுள்ளது. ஆனால் மேற்படி தேதியன்று எதிரி புகார்தாரரின் வீட்டிற்கு செல்லவில்லை என்றும், வேறு இடத்தில் இருந்தார் என்பதை நிரூபிக்கும் வகையில் எதிரி தரப்பில் எவ்வித ஆவணங்கள் மற்றும் சாட்சியங்கள் முன்னிலைப்படுத்தவில்லை. எனவே மேற்படி தேதியன்று எதிரி புகார்தாரரின் வீட்டிற்கு செல்லவில்லை என எதிரி தரப்பில் நிரூபிக்கவில்லை என்று முடிவு செய்கிறது.

AMALANATHA KAMALAKANNAN S
Digitally signed by AMALANATHA KAMALAKANNAN S
Date: 2026.06.25 18:40:51 +0530

10.15. இவ்வழக்கில் காசோலை மற்றும் அதிலுள்ள கையொப்பம் எதிரியுடையதுதான் என்ற காரணத்தினாலும், எதிரியும், புகார்தாரரும் ஒருவருக்கொருவர் தெரிந்த நபர்கள் என்று நிரூபிக்கப்பட்டுள்ள காரணத்தினாலும், எதிரி புகார்தாரர் மீது சட்டரீதியான நடவடிக்கை எடுக்காத காரணத்தினாலும், எதிரி பணம் வாங்கியதாக சொல்லப்படும் தேதியன்று புகார்தாரரை சந்திக்கவில்லை என்பதை நிரூபிக்க எதிரி தரப்பில் எவ்வித முயற்சிகளும் எடுக்காத காரணத்தினாலும், எதிரி தரப்பின் எதிர்வாதத்தை நிரூபிக்கும் வகையில் சான்றாவணங்கள் மற்றும் வேறு சாட்சிகளை எதிரி தரப்பில் தாக்கல் செய்யாத காரணத்தினாலும், புகார்தாரருக்கு ஆதரவாக இருக்கும் மாற்றுமுறை ஆவண சட்ட பிரிவு 118(a) மற்றும் பிரிவு 139 கீழான சட்டப்படி அனுமானங்களை எதிரி தரப்பில் சாட்சிகள் மற்றும் சான்றாவணங்கள் மூலம் மறுக்கப்படவில்லை என்று முடிவு செய்கிறது. எனவே எதிரி புகார்தாரரிடம் வாங்கிய சட்டப்படியான கடனுக்கு ஆதரவாக தாவா காசோலையை புகார்தாரரிடம் கொடுத்துள்ளார் என்றும், காசோலை தொகையை எதிரி கொடுக்க கடமைப்பட்டவர் என்று இந்நீதிமன்றம் முடிவு செய்கிறது.

10.16. மேலே விவரிக்கப்பட்டுள்ள காரணங்களின் அடிப்படையில் எதிரி மீது மாற்றுமுறை ஆவணசட்டம் பிரிவு 138–ன் படியான குற்றச்சாட்டு சந்தேகத்திற்கு இடமின்றி நிரூபிக்கப்பட்டுள்ளது என்றே இந்நீதிமன்றம் முடிவு செய்கிறது.

11. <u>முடிவு:</u>

முடிவாக எதிரி மீது பிரிவு 138 மாற்றுமுறை ஆவண சட்டத்தின் கீழ் குற்றவாளி என தீர்மானித்து இந்நீதிமன்றம் முடிவு செய்கிறது.

12.<u>தண்டனை:</u>

முடிவாக, எதிரி மாற்றுமுறை ஆவணங்கள் சட்டம் பிரிவு 138–ன் கீழ் குற்றவாளி என்று முடிவு செய்து, எதிரிக்கு மாற்று முறை ஆவணங்கள் சட்டம் பிரிவு 138–ன் கீழான குற்றத்திற்கு 6 மாதங்கள் மெய்க்காவல் சிறை தண்டனை

AMALANATHA KAMALAKANNAN S
Digitally signed by AMALANATHA KAMALAKANNAN S
Date: 2026.06.25 18:40:58 +0530

அனுபவிக்க வேண்டும் என்று பிரிவு 278(2)–ன் B.N.S.S கீழ் தீர்ப்பளிக்கப்படுகிறது. இவ்வழக்கில் சொத்து எதுவும் தாக்கல் இல்லை.

13. குவிமுச பிரிவு 357–ன் கீழ் இழப்பீடு:

தாவா காசோலை தொகையை எதிரி புகார்தாரருக்கு 2 மாத காலத்திற்குள் பிரிவு 395(3) B.N.S.S–ன் கீழ் இழப்பீடாக செலுத்த வேண்டும், தொகை செலுத்த தவறினால் மேலும் கூடுதலாக எதிரி 1 மாதம் காலம் மெய்காவல் சிறை தண்டனை அனுபவிக்க வேண்டும் என்று இந்நீதிமன்றம் உத்தரவிடப்படுகிறது.

இந்த உத்தரவானது என்னால் சுருக்கெழுத்து தட்டச்சருக்கு சொல்லப்பட்டு அவரால் கணிணியில் தட்டச்சு செய்யப்பட்டு, பின் என்னால் சரிபார்க்கப்பட்டு 2026ம் வருடம் ஜீன் மாதம் 25–ம் நாள் என்னால் திறந்த நீதிமன்றத்தில் அவையறிய பகரப்பட்டது.

AMALANATHA KAMALAKANNAN S
Digitally signed by AMALANATHA KAMALAKANNAN S
Date: 2026.06.25 18:41:03 +0530

நீதித்துறை நடுவர்,
விரைவு நீதிமன்றம், உத்தமபாளையம்.

1. புகார்தாரர் தரப்பு சாட்சி:

1	ம.சா.1	திரு.சூர்யமூர்த்தி (புகார்தாரர்)

2. புகார்தாரர் தரப்பு சான்றவணங்கள்:

1	ம.சா.ஆ.1	27.06.2025 நாளிட்ட 981013 என்ற எண் கொண்ட ஸ்டேட் பேங்க் ஆப் இந்தியா வங்கி, உத்தமபாளையம் கிளைக்குரிய ரூ.6,00,000/–க்கான காசோலை அசல்
2	ம.சா.ஆ.2	01.07.2025 நாளிட்டு Funds Insufficient என்ற காரணத்தினால் திருப்பப்பட்ட வங்கி குறிப்புரை அசல்
3	ம.சா.ஆ.3	31.07.2025 நாளிட்டு Funds Insufficient என்ற காரணத்தினால் திருப்பப்பட்ட வங்கி குறிப்புரை அசல்
4	ம.சா.ஆ.4	02.09.2025 நாளிட்டு Funds Insufficient என்ற காரணத்தினால்

		திருப்பப்பட்ட வங்கி குறிப்புரை அசல்
5	ம.சா.ஆ.5	06.09.2025 நாளிட்ட புகார்தாரர் எதிரிக்கு அனுப்பிய வழக்கறிஞர் அறிவிப்பு அலுவலக நகல் மற்றும் அஞ்சலக இரசீது
6	ம.சா.ஆ.6	09.09.2025 எதிரி அனுப்பிய பதில் அறிவிப்பு
7	ம.சா.ஆ.7	புகார்தாரர் எதிரிக்கும், எதிரியின் வழக்கறிஞருக்கும் அனுப்பிய ரீஜாயிண்டர் அறிவிப்பு அஞ்சலக இரசீதுடன் கூடிய நகல்

3. <u>புகார்தாரர் தரப்பு சான்றுபொருள்</u>: இல்லை

4. <u>எதிரி தரப்பு சாட்சி:</u>

1	எ.சா.1	திரு.மாரிராஜா

<u>5. எதிரி தரப்பு சான்றாவணங்கள்:</u>

1	எ.சா.ஆ.1	எதிரி தனது காசோலை தொலைந்தது சம்மந்தமாக உத்தமபாளையம் காவல் நிலையத்தில் இணையதளத்தில் புகார் கொடுத்ததற்கான ஆவணம்
2	எ.சா.ஆ.2	எதிரி இணையதளத்தில் புகார் கொடுத்ததற்கான இரசீது

<u>6. எதிரி தரப்பு சான்றுபொருள்: இல்லை</u>

AMALANATHA KAMALAKANNAN S
Digitally signed by AMALANATHA KAMALAKANNAN S
Date: 2026.06.25 18:41:11 +0530

நீதித்துறை நடுவர்,
விரைவு நீதிமன்றம், உத்தமபாளையம்.